

# இது உங்கள் ஆண்டு அறிக்கையின் விளக்கப்படச் சுருக்கத்தைப் படிப்பதற்கான வழிகாட்டியாகும்.

கீழ்க்காணும் விளக்கப் படச்சுருக்கத்தில் உள்ள கணக்கு விவரங்கள் விளக்கத்திற்கானவை மட்டுமே. உங்களுக்குரிய கணக்கு விவரங்கள், நீங்கள் சென்ற ஆண்டு செய்த பரிவர்த்தனைகளின் அடிப்படையில் மாறுபட்டிருக்கும்.




1A


உங்களது ஆண்டு அறிக்கையைப் பதிவிறக்கம் செய்ய கிளிக் செய்யுங்கள்.




1B

**உங்களது ஆண்டு அறிக்கையின் சுருக்கம்**

உங்களது ஆண்டு அறிக்கையுடன் தொடர்புடைய பிரிவுகளைக் காண, தலைப்புகள்மீது கிளிக் செய்யுங்கள்.




2


**மத்திய சேம நிதி சேமிப்புகள்**


உங்களது மத்திய சேம நிதிக் கணக்குகள் அனைத்திலும் 31 டிசம்பர் 2022 தேதியில் உள்ள மொத்த இருப்புத் தொகை.

3

**நிதிநிலை உதவிக்குறிப்பு**

உங்கள் சாதாரணக் கணக்கில் உள்ள சேமிப்பை சிறப்பு அல்லது ஓய்வுக்காலக் கணக்குக்கு மாற்றுவது, அல்லது மத்திய சேம நிதிக் கணக்கில் ரொக்கப்பணம் போட்டு வரிவிலக்குப் பெறுவது போன்ற வழிகளின் மூலம் உங்களின் மற்றும்/அல்லது உங்களது அன்புக்குரியவர்களின் ஓய்வுக்காலச் சேமிப்பை எவ்வாறு பெருக்கலாம் என்று தெரிந்து கொள்ளுங்கள்.




4

**உங்களது மத்திய சேம நிதி சேமிப்புகளைப் பெருக்குதல்**


உங்களது மத்திய சேம நிதிக் கணக்குகளில் 2022-ல் செலுத்தப்பட்ட பல்வேறு சந்தாக்களின் விவரச்சுருக்கம்.

நீங்களும், உங்கள் முதலாளியும், அரசாங்கமும் 2022-ல் உங்களது மத்திய சேம நிதிக் கணக்குகளில் செலுத்திய சந்தாவின் விவரங்கள்.

கீழ்க்காண்போரிடமிருந்து நீங்கள் பெற்ற சந்தாவின் விவரங்களைப் பார்வையிட கிளிக் செய்யுங்கள்:


- நீங்கள்
- முதலாளி
- அரசாங்கம்

அரசாங்கத்திடமிருந்து உங்களுக்குக் கிடைத்த பங்களிப்புகளின் விவரங்களைக் காட்டும் எடுத்துக்காட்டு




2022-ல் மற்ற பரிவர்த்தனைகளிலிருந்து உங்கள் கணக்கில் நீங்கள் பெற்ற மொத்தத் தொகை.

விவரங்களைப் பார்வையிட கிளிக் செய்யுங்கள்.




5


**வாழ்க்கையின் முக்கியத் தேவைகளுக்குப் பயன்படுத்துதல்**


உங்கள் வாழ்க்கையின் முக்கியத் தேவைகளுக்காக 2022-ல் நீங்கள் பயன்படுத்திய சேமிப்புகளின் விவரச்சுருக்கத்தைப் பார்வையிட "Outflow" தலைப்பின்மீது கிளிக் செய்யுங்கள்.

2022-ல் நீங்கள் பயன்படுத்திய ஒட்டுமொத்த மத்திய சேம நிதி சேமிப்புத் தொகை

முக்கியத் தேவைகளின் வகைகள்:

- குடியிருப்பு
- ஓய்வுக்காலம்
- சுகாதாரப் பராமரிப்பு
- மற்றவை – விவரங்களைப் பார்வையிட கிளிக் செய்யுங்கள்





6

**உங்கள் ஓய்வுக்காலத்திற்கான ஆதரவு / உங்கள் பொற்காலத்திற்கான ஆதரவு (55 வயது அல்லது அதற்கும் மேற்பட்ட வயதுள்ள உறுப்பினர்களுக்கு)**

உங்களின் ஓய்வூதிய வழங்குதொகைகள் பற்றிய விவரங்கள் ஒரே பார்வையில்.





7

**மத்திய சேம நிதிக் கழகம் நிர்வகிக்கும் அரசாங்கத் திட்டங்களால் நீங்கள் பெற்ற நன்மைகள்**

நீங்கள் 2022-ல் அரசாங்கத்திடமிருந்து பெற்ற ரொக்கத் தொகையின் விவரச்சுருக்கம்.

விவரங்களைப் பார்வையிட கிளிக் செய்யுங்கள்.





8

**உங்களது மத்திய சேம நிதிப் பரிவர்த்தனைகள்**

நீங்கள் 2022-ல் செய்த முதல் மூன்று மத்திய சேம நிதிப் பரிவர்த்தனைகளின் முன்னோட்டம்.

நீங்கள் 2022-ல் செய்த மத்திய சேம நிதிப் பரிவர்த்தனைகள் அனைத்தையும் பார்வையிட கிளிக் செய்யுங்கள்.




9

**உங்களுக்கான தகவல்கள்**

31 டிசம்பர் 2022 நிலவரப்படி, உங்களுக்குப் பொருந்தும் மத்திய சேம நிதித் திட்டங்கள் தொடர்பான தகவல்கள்.